


# கழுகின் சத்தம்

## ஏப்ரல் 8, 2025

1

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# நான் சவாரி செய்த ‘பிரின்ஸ்’ என்னும் குதிரை



414. 'இது மிகவும் அதிசயம்' என்று எண்ணியிருக்கும்போது,

415. ஏதோ ஒன்று சத்தமிடுவதைக் கண்டேன். நான் திரும்பிப் பார்த்த போது, நான் சவாரி செய்த 'பிரின்ஸ்' என்னும் குதிரை என்னருகில் நின்று அதன் தலையை என் தோளின்மேல் போட்டு என்னைத் தழுவ வந்தது. நான் அதற்கு சர்க்கரை கொடுக்கும்போது இருப்பது போன்று, உங்களுக்குத் தெரியும், அது தன்னுடைய... நானும் என் கையை அதன் மேலிட்டு, "பிரின்ஸ்,

நீ இங்கு இருப்பாய் என்று எனக்குத் தெரியும்” என்றேன்.

பிறகு ஏதோ ஒன்று என் கையை நக்கியது போன்ற உணர்ச்சி ஏற் பட்டது. என் நாய் அங்கு நின்று கொண்டிருந்தது.

416. ஷார்ட் (Short) என்பவர் அதற்கு விஷம் கொடுத்து கொன்ற போது, அவரைக் கொன்று பழி வாங்குவேன் என்று சபதம் செய் தேன். அப்பொழுது, எனக்கு ஏறக் குறைய பதினாறு வயதிருக்கும். துப்பாக்கியை எடுத்துக்கொண்டு காவல் நிலையத்திலேயே அவரைச் சுட்டுக் கொல்ல நான் புறப்பட்ட போது, என் தகப்பனார் என்னைத்

தடுத்து விட்டார். நான் அந்த நாயின் கல்லறைக்குச் சென்று, எப்படி யாவது அவரைக் கொன்று பழிவாங் குவேனென்று சபதம் செய்தேன்.

நான் “ஃபிரிட்ஸ் (Fritz) நீ எனக்கு ஒரு தோழனைப் போலிருந்தாய். நான் பள்ளிக்கு செல்ல, என்னை கவனித்தாய். உனக்கு வயதாகும் போது, நான் உன்னைக் காப்பேன். ஆனால் இப்பொழுதோ உன்னைக் கொன்று விட்டார்களே. ஃபிரிட்ஸ் அவர் இனிமேல் உயிர்வாழ்வ தில்லை என்று நான் உனக்கு வாக்களிக்கிறேன். அவர் வாழமாட் டார் என்று நான் உனக்கு வாக்கு கொடுக்கிறேன். அவர்மீது

வண்டியை ஏற்றி கொன்று விடு வேன் என்று நான் நினைத்தேன். (என்றைக்காவது தெருவில் அவர் நடந்து செல்வதைப் பார்ப்பேன் அப்பொழுது) உனக்காக நான் அவரை கொல்வேன்” என்று இவ் விதமாய்க் கூறினேன்.

417. ஆனால் என்ன நேர்ந்தது தெரியுமா? அந்த மனிதனை நான் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தி, அவருக்கு இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தேன். அவர் மரித்தபோது அவர் உடலை அடக்கம் செய்தேன். ஆம், ஐயா. என் நாயை அவர் விஷம் வைத்துக் கொன்ற சில வருடங்களுக்குள் நான் இரட்சிக்கப்பட்டேன். அதன்பின்

நான் காரியங்களை வித்தியாசமாகக் கண்டேன். அப்பொழுது அவரை வெறுப்பதற்கு மாறாக அவரை சிநேகித்தேன்.

418. அங்கு ஃபிரிட்ஸ் (Fritz) என்னும் பெயர் கொண்ட என் நாய் என் கையை நக்கினவாறு நின்று கொண்டிருந்தது. நான் பார்த்தேன்...

419. அதைக் கண்டபோது, என்னால் அழமுடியவில்லை. அங்கு எவரும் அழவே முடியாது. அங்கு எல்லோரும் மகிழ்ச்சியுற்றிருக்க வேண்டும். விசனம் என்பது அங்கு காணப்பட முடியாது. அங்கு எவரும் மரிக்கவும் முடியாது. ஏனெனில் அங்கு எல்லாம் ஜீவனாகவே

அமைந்திருந்தது. பாருங்கள்? பாருங்கள்? அவ்வாறே எவரும் அங்கு வயோதிபப் பிராயத்தை அடைய முடியாது. எல்லோரும் வாலிபராகவே இருந்தனர். அது மிகவும் பரிபூரணமாயிருந்தது. 'ஓ, இது மிகவும் அற்புதமல்லவா!' என்று நான் நினைத்தேன். இத் தகைய லட்சக்கணக்கானவர் மத்தி யில் நானும் இருந்தேன். ஓ, என்னே! நான் உண்மையாக என் வீட்டில் இருந்தேன், பாருங்கள்.

420. அப்பொழுது அங்கு ஒரு சத்தம் கேட்டது. அது, “நீ சிநேகித்த அனைவரையும், உன்னை மனப் பூர்வமாக சிநேகித்த அனைவரை யும், தேவன் உனக்குக் கொடுத்

திருக்கிறார்” என்றது. இது நான் செய்த ஊழியத்திற்கு தேவன் அளித்த பலன். ஆனால் எனக்கு எவ்வித பலனும் வேண்டாம்.

நான் “கர்த்தருக்கு ஸ்தோத்திரம்” என்றேன்.

421. எனக்கு ஒரு விசித்திரமான உணர்ச்சி அப்பொழுது ஏற்பட்டது. அப்பொழுது நான், “காரியம் என்ன? விசித்திரமாக உணர்கிறேன்” என்று நினைத்தேன். நான் திரும்பிப் பார்த்தபோது கட்டிலின் மேல் கிடந்திருந்த என் உடல் அசையத் தொடங்கினது. அப்பொழுது நான், “ஓ, எனக்கு இங்கிருந்து போவதற்கு

மனதில்லை. என்னைப் போகவிட வேண்டாம்” என்றேன்.

422. ஆனால் சுவிசேஷம் மக்களுக்குப் பிரசங்கிக்கப்பட வேண்டும். ஒரு நொடிப்பொழுதில் நான் மறுபடியும் கட்டிலின் மேல் படுத்துக் கொண்டிருந்தேன்.

423. இந்த என் அனுபவம் 'வியாபாரிகளின் சத்தம்' (Business men's Voice) என்னும் பத்திரிக்கையில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் அச்சடிக்கப்பட்டு உலகம் பூராவும் சென்றது. சகோ, நார்மன் - அவர் இக்கூட்டத்தில் இருக்கிறார் என்று நினைக்கிறேன். அவர் அதனை மொழிப்பெயர்த்து கைப்

பிரதிகளாக அச்சடித்து விநியோகம் செய்தார். அது எல்லா இடங்க ளுக்கும் சென்றது. அநேக ஊழியர் கள் அதைக் குறித்து எனக்கு எழுதி னார்கள். அவர்களில் அநேகர்...

424. அவைகளில் ஒன்றை நான் கூறட்டும். நூற்றுக்கணக்கானவர் எனக்கு எழுதினர். இதோ இது இவ்விதமாக இருந்தது, "சகோதரன் பிரன்ஹாம், வியாபாரிகளின் சத்தம் என்னும் பத்திரிகையில் வந்த உங்க ளுடைய தரிசனம்..."

425. டாமி நிக்கலை (Tommy Nickel) நான் பாராட்டுகிறேன். அவர் இப்பொழுது வியாபாரிகள் சங்கத் தில் இல்லை. என்ன காரணமோ

நான் அறியேன். திரித்துவக் கொள்கையைக் கடைபிடிக்கும் அந்த பத்திரிக்கையில் அவர், “பவுல் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்து அவ்விதம் செய்யக் கட்டளையிட்டுள்ளார். நானும் அதையே செய்துள்ளேன்” என்று நான் கூறியதை எவ்வித மாற்றமுமின்றி அப்படியே பிரசுரித்தார். அதன்பின் நான், “என்னே!” என்று யோசித்தேன்.

426. அந்த போதகர், “சகோதரன் பிரன்ஹாமே உங்கள் தரிசனம்...” என்று எழுதியிருந்தார்.

427. அவர் அதை தரிசனம் என்று குறிப்பிட்டிருந்தார். அது

ஒருக்கால் தரிசனமாய் இருந்திருக் கலாம். நான் வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாகக் கூற விரும்ப வில்லை. நான் முதலாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டு இத்தகைய சம்பவங்களைக் கண்டேனானால், மூன்றாம் வானம் வரைக்கும் எடுக் கப்பட்ட பவுல் என்னவெல்லாம் கண்டிருப்பான்? அது என்ன? அதைக் குறித்து மனிதர் பேசவும் கூடாது என்று அவன் கூறினான். எனக்கு நேர்ந்ததும் எடுக்கப்படுதலா என்னவென்பது எனக்குத் தெரிய வில்லை. என்னால் சொல்ல முடிய வில்லை. நான் அதை உங்களுக்கு கூறவும் முடியாது.

428. அதை வாசித்த ஒரு போதகர், “சகோ. பிரன்ஹாம் உங்கள் தரிசனம் பெரும்பாலும் வேதவாக்கியங்களுடன் ஒத்திருக்கின்றது. ஆனால் குதிரை அங்கு இருந்ததாக நீர் கூறுவது மாத்திரம் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பரலோகம் மனிதருக்கு ஏற்படுத்தப் பட்டுள்ளதேயன்றி குதிரைகளுக் கல்ல” என்று எழுதியிருந்தார். வேத தத்துவத்தினால் உண்டாகும் மனித ஞானத்தைப் பாருங்கள்.

429. நல்லது, நான் அங்கு சபையின் அலுவலகத்தில் அமர்ந்திருந் தேன். நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்கு முன்பு எனது மகன்

பில்லி அந்தக் கடிதத்தை என்னிடம் கொண்டு வந்தான்.

430. நான் அந்த போதகருக்கு இவ்விதம் பதிலளித்தேன்; “என் அருமை சகோதரனே, நீங்கள் வேத வாக்கியங்களைக் குறித்து கொண் டுள்ள அறிவைக் குறித்து அதிசய முறுகிறேன். நான் பரலோகத்தி லிருந்ததாகச் சொல்லவில்லை. பரதீசைப் போன்ற ஒரு ஸ்தலத்தில் இருந்ததாகவே நான் குறிப்பிட் டுள்ளேன். ஏனெனில் கிறிஸ்து அதற் கும் உயரமாயுள்ள ஒரு ஸ்தலத்தில் இருந்தார். உங்கள் சந்தேகம் தீர வேண்டுமானால், வெளிப்படுத்தல் 19-ம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். இயேசு பரலோகத்தி

லிருந்து புறப்பட்டு வரும்போது வெள்ளைக் குதிரையின் மேல் ஏறிக்கொண்டு வருகிறார். (வெளி. 19:11-14). அது மாத்திரமல்ல. அவருடன் காணப்படும் பரிசுத்தவான்கள் அனைவரும் வெள்ளைக் குதிரைகளின்மேல் காணப்படுகின்றனர் என்பதை அறியவும். சரி. முற்றிலும் சரி. ஆம், உண்மையாக.

431. அதே ஸ்தலத்தில்... கழுகைப் போன்ற ஜீவன், காளையைப் போன்ற ஜீவன் இருக்கின்றனவே... நல்லது, என்னே, எலியாவைக் கொண்டு சென்ற குதிரைகள் எங்கிருந்து வந்தன? மனித சிந்தை அதில் தவறு காண விழைவதைப் பாருங்கள். அது உண்மை.



# ஒன்று கறுப்பு நாய், மற்றது வெள்ளை நாய்

**William Marrion Branham**



# *Title:* 64-08-30E கேள்விகளும் பதில்களும் COD #22

36. அவன் ஒரு சமயம் இரட் சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டதாக யாரோ ஒருவர் என்னிடம் கூறினார். அவர் அவனிடம், "நீ எப்படியிருக்கிறாய்? என்று கேட்டதற்கு,

அவன், "நன்றாகவும் மோசமாக வும் இருக்கிறேன்" என்றானாம்.

அவர், "நன்றாகவும் மோசமாக வும் இருக்கிறாய் என்றால் அதன் அர்த்தம் என்ன?" என்று கேட்டா ராம்.

அவன், "நான் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்ட முதற்கு எனக்குள் இரண்டு நாய்கள் உள்ளன. ஒன்று கறுப்பு நாய், மற்றது வெள்ளை நாய் அவை எப்பொழுதும் ஒன்றோடொன்று தர்க்கித்து, ஒன்றைப் பார்த்து மற்றொன்று குரைத்து சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றன: வெள்ளை நாய் எனக்கு நன்மை செய்ய வேண்டுமென்று விரும்புகிறது, கறுப்பு நாய் எனக்குத் தீமை செய்ய நினைக்கிறது" என்றானாம்.

"நல்லது, சண்டையில் எந்த நாய் ஜெயிக்கிறது? என்று அவனைக் கேட்டதற்கு,

37. அவன், “நான் எந்த நாய்க்கு ஆகாரம் அதிகம் கொடுக்கிறேன் என்பதை அது பொறுத்தது” என்றானாம். பாருங்கள்? அது ஒரு நல்ல பதில் என்று எண்ணுகிறேன். பாருங்கள்? உங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கிற அந்த இரு சுபாவங்களில், நீங்கள் எந்த சுபாவத்தை ஆதரிக்கிறீர்கள் என்பதை அது பொறுத்தது - உலகப் பிரகாரமான காரியங்களில் “ஈடுபட்டிருக்கும் மாம்சத்துக்குரிய சுபாவத்தையா. அல்லது தேவனுடைய காரியங்களில் ஈடுபட்டிருக்கும் ஆவிக்குரிய சுபாவத்தையா? That does it.

# மிக மோசமாக படுகாயமடைந்த ஒப்பசம் மிருகம் சுகமடைதல்



சகோ.வில்லியம் பிரன்ஹாம்

## தலைப்பு: பதினோராவது கட்டளை (The Eleventh Commandment)

9. இயற்கையுடன் நான் அன்பைக் கொண்டு தொடர்பு கொள்ள இன்னொரு முறை இவ்விதமாக நிகழ்ந்தது: கடந்த கோடைக் காலத்தில் நான் என் அருமை நண்பர்கள் லீயோ மற்றும் ஜீனுடன் வீட்டிற்கு முன்புறத்தில் உட்கார்ந்து தேவ னுடைய வார்த்தையை அவர்களுக்கு போதித்துக் கொண்டிருந்தேன். ஒரு தாயின் அன்பு என்ற பொருளின் பேரில் ஒரு ஆழமான பாடத்தில் நாங்கள் இருந்தோம். அக்காலை செய்தித்தாளில் ஒரு அழகான இளம் கறுப்பினப் பெண் முறைத்தவறி கருவுற்றிருந்த ஒரு குழந்தையை பெற் றெடுத்து ஒரு போர்வையில் சுற்றி அதை

ஓஹியோ நதியின் பாலத்திற்கு கொண்டு சென்று அதை தண்ணீரில் போட்டு விட்ட சம்பவம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதை ஒரு டாக்சிகார் ஓட்டுனர் சட்ட ஒழுங்கு அதிகாரிகளிடம் தெரிவித்தார், அவர்கள் அதை விசாரித்து அது உண்மை என்பதை கண்டுபிடித்தனர். அந்த பெண்ணிற்கு நிச்சயமாக அன்பு என்பது இல்லை - அந்த குழந்தையை பெற்றெடுத்த ஒரு பெண் ணாக மட்டும் அவள் இருந்தாள், ஆனால் அவள் தாய் அல்ல என்று அந்த காரியத்தைக் குறித்து நாங்கள் கருத்து பரிமாறிக்கொண்டிருந்தோம்.

அப்பொழுது வண்டிப்பாதையில் ஒரு ஓப்பசம் (ஒரு சிறு அமெரிக்க மிருகம் - தமிழாக்கியோன்) என்னும் சிறு மிருகம் வந்து கொண்டிருந்ததை நாங்கள் நேரடி யாகக் கண்டோம். அது வேலிகள் இல்லாத

மற்ற வீட்டு முற்றங்களைக் கடந்து வேலியிடப்பட்டிருந்த என் வீட்டு முற்றத்திற்கு, அது தன்னுடைய வழியை அறிந்து வைத்துள்ளது போல, நேராக வந்தது. அது வேலியின் கீழாக தவழ்ந்து தாண்ட முயலவில்லை, அது நேராக வண்டிப் பாதையிலே வந்து திரும்பி, நேராக என் வீட்டு முன்புறத்துக்கு வந்தது. நான் பையன்களிடம், "அதற்கு ராபீஸ் நோய் அல்லது வேறெதோ ஒன்று இருக்கவேண்டும், ஏனெனில் ஓப்பசம்கள் இரவில் தான் நடமாடும் - அவைகளால் பகலில் சரியாக பார்க்கமுடியாது." என்றேன்.

அதைப் பார்க்கும்படியாக நாங்கள் அந்த வண்டிப்பாதைக்கு அருகில் சென் றோம். முந்தைய நாளில் சகோதரன் பாங்க்ஸ் உட் விட்டு விட்டிருந்த அந்த

தோட்டத்தை சமப்படுத்தும் கட்டையை நான் எடுத்து பாதுகாப்பிற்காக அதன் மேல் கவனமாக வைத்தேன். அந்த மிருகம் வழக்கமாக செய்கின்ற காரியமான, இறந் தது போல பாசாங்கு செய்யாமல், அது அந்த கட்டையை கடிக்க ஆரம்பித்தது. இது என்னை வியப்புக்குள்ளாக்கினது, ஏனெ னில் அந்த ஓப்பசம் மிருகங்கள் ஒரு சிறு அபாய அடையாளத்தைக் கண்ட உடனே இறந்து விட்டது போலப் பாசாங்கு செய்து படுத்து கிடக்கும் - அது அதின் மூல வழக்கமாகும்.

10. நான் அதன் முதுகுப் புறமாகத் திருப்பிப் பார்த்தேன், அது மிக மோசமாக படுகாயமடைந்திருந்தது - அதின் கால் ஒன்று உடைந்திருந்தது, அதின் தலையில் ஒரு பக்கம் நசுக்கப்பட்டு, நசுக்கப்பட்ட பகுதி உறைந்து போன ரத்தத்தால் நிறைந்

திருந்தது. அந்த காயத்தில் ஈக்கள் அமர்ந்து அதைப் பெரிதாக்கி, அதில் புழுக்கள் உருவாக ஏதுவானது. அது மிக மோசமாக கிருமிகளால் நிறைந்ததால், அழுகின மாமிச நாற்றம் போல நாற்றமெடுத்தது. அது சில நிமிடங்கள் குப்புறப்படுத் திருக்கையில் அது சுமந்து வந்திருந்த சிறு குட்டிகள், அதினுடைய குட்டிகளை வைக் கும் மதலைப்பையிலிருந்து வெளியே வந்து விட்டன. அந்த ஓப்பசம் மிக பெலவீனமாக இருந்ததால் அதனுடைய மதலைப்பையை (pouch) நீண்ட நேரம் மூடிக்கொண்டிருக்க முடியவில்லை. அங்கே ஒன்பது சிறு குட்டிகள் இருந்தன. அது தன்னுடைய சிறு குட்டிகளுக்கு பாலூட்டி அவைகளைப் பாதுகாக்க முயற் சித்துக் கொண்டிருந்தது. ஓ அதை நினைத்துப் பாருங்கள், சரியா! அது தன் மரித்துக் கொண்டிருக்கிற நிலையிலும்

பலம் குறைகின்ற நிலையிலும் தன்னுடைய சிறு குட்டிகளுக்கு பாலூட்டி அவைகளைக் காப்பாற்ற முயற்சித்துக் கொண்டிருந்தது. நான் லீயோ மற்றும் ஜீனிடம், "இங்கே பாருங்கள் இளைஞர்களே, இது தான் உண்மையான தாய் - இது தன் குழந்தைகளை காப்பாற்ற தன்னுடைய கடைசி மூச்சு வரை பிரயாசப் படுகிறது, ஆனால் அந்த கறுப்பு இன பெண்ணோ தன்னுடைய குழந்தையை ஆற்றில் போட்டு விட்டாள். ஒரு தாய் தன் குழந்தைக்கு பாராட்டுகிற உண்மையான தூய்மையான அன்பு இங்குள்ளது," என்றேன்.

ஓ, என் இருதயம் மிகவுமாக தொடப்பட்டது! அது மறுபடியுமாக எழுந்து நிற்க முயற்சித்தது, நான் அதை விட்டு விட்டேன், அது எழுந்து என் வீட்டை

நோக்கியிருந்த பாதையில் செல்ல ஆரம் பித்தபோது நாங்கள் அங்கு நின்று அதை கவனித்துக் கொண்டிருந்தோம். அந்த ஒப்பசம் மிருகம் நேராக என்னுடைய வீட்டு முன் படிக்கட்டுப் படிகளில் சென்று சரிந்து விழுந்தது, அடுத்த அடியை அது எடுத்து வைக்கவே இல்லை. நாங்கள் அதனிடம் நடந்து சென்றோம், அப் பொழுது சகோதரன் மற்றும் சகோதரி உட்ஸ் வந்தார்கள். சகோதரி உட்ஸ் ஒரு கால்நடை மருத்துவம் தெரிந்தவர்களான படியால் அவர்கள் என்னிடம், அது பிழைக்க முடியாத அளவிற்கு மிக மோசமாக படுகாயமடைந்திருக்கிறது, ஆகவே சகோதரன் பிரன்ஹாமே நீங்கள் அதை கொன்று போடத்தான் வேண்டும்'' என்று கூறினார்கள். நானோ, "ஓ, என்னால் முடியாது!'' என்றேன். அதற்கு அவர்கள், "இது மரிக்கத்தான் போகின்றது, அதன்

குட்டிகள் பட்டினியால் சாகப் போகிறது, ஆகவே அந்த குட்டிகளை எடுத்து அவை களை சீக்கிரமாக கொன்று விடுங்கள்'' என்றார்கள். அவைகள் வேதனைப்பட விடுவதைப் பார்க்கிலும், அவைகளைக் கொன்று விடுவது நலம் என்று என்னிடம் அவர்கள் உறுதியுடன் கூறினார்கள் - ஆனால் ஓ, அவ்விதமாக என்னால் செய்ய முடியாது. ஆகவே அவர்கள் ''சகோதரன் பிரன்ஹாமே, நீர் சென்று துப்பாக்கியைக் கொண்டு வந்து அந்த பரிதாபமான மிருகத்தை சுட்டுக் கொன்று விடுங்கள்'' என்று கூறினார்கள். ''இல்லை, சகோதரி உட்ஸ், அவ்விதம் செய்ய வேண்டும் என்று நான் நம்பவில்லை. என்னால் அதைச் செய்ய முடியாது,'' என்றேன். அதற்கு அவர்கள், ''நீங்கள் ஒரு வேட் டைக்காரர் தானே?'' என்றார், அதற்கு நான், "ஆமாம், ஆனால் நான் கொலை

செய்பவன் அல்ல'' என்றேன். அதற்கு அவர்கள், "நல்லது, என் கணவர் அவ் விதம் செய்யும்படி கூறுங்கள்'' என்றார்கள். அந்த ஏற்பாடும் எனக்கு சரியானதாக தென்படவில்லை. ஆகவே நான், ''சரி, நாம் சற்று காத்திருப்போம்'' என்றேன்.

நாளானது கடந்து கொண்டிருந்தது, அன்று மாலை நான் என் குடும்பத்துடன் வெளியே சென்றேன். நாங்கள் திரும்பி வந்த போது ஒ அந்த ஒப்பசம் இன்னுமாக இருக்கின்றதா என்று காண நான் சென் றேன். அது அங்கே இருந்தது, முன் பிருந்ததை விட மரணத்தை அது நெருங்கி இருந்தது. அதற்கு சிறிது பலம் இருந் திருக்குமானால் இருட்ட ஆரம்பித்த உடனே அது புறப்பட்டுச் சென்றிருக்கும். ஏனெனில் அவை இரவில் நடமாடும் விலங்குகளாகும் என்பது எனக்குத் தெரி

யும் - ஆனால் அது அங்கே இன்னுமாக இருந்தது, அதின் குட்டிகள் பால் குடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தன. ஓ, காயம் பட்டு மரித்துக் கொண்டு படுத்திருந்த அந்த பரிதாபமான விலங்கிற்காக நான் மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருந் தேன்.

அடுத்த நாள் காலை என் மகள் ரெபெக்காள் என்னிடமாக வந்தாள் - அப்பொழுது சுமார் காலை ஆறு மணி இருக்கும், நான் கர்த்தர் பேரில் தியா னிக்கத்தக்கதாக என்னுடைய அறைக்கு அப்பொழுது தான் சென்றிருந்தேன். அவள், அப்பா, அந்த பாவமான தாய் ஒப்பசம் விலங்கை என் மனதிலிருந்து என்னால் எடுத்துப் போட முடியவில்லை'' என்றாள். நான், ''என்னாலும் அவ்வித மாகச் செய்யமுடியவில்லை பெக்கி''

என்றேன். ஆகவே நாங்கள் அதைச் சென்று பார்க்க முடிவு செய்தோம், நாங்கள் அந்த அதிகாலை வேளையில் அங்கே நின்று அந்த மிருகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம், அதன் நிலைமை இன்னும் மோசமாகியிருந்தது - அத னுடைய சுவாசம் மிக குறைவாக இருந்ததால் அது சுவாசிக்கிறதா என்பதை கண்டுபிடிப்பதே அரிதாயிருந்தது. பெக்கி அழ ஆரம்பித்தாள். ஆகவே நாங்கள் உள்ளே சென்றோம். நான் அவளை திரும்பவுமாக படுக்கைக்கு அனுப்பினேன். நான் திரும்பி என் ஜெப அறைக்கு வந்து உட்கார்ந்து, "ஓ தேவனே, அந்த பரிதாப மானதாய் ஒப்பசம் எவ்வளவாக வேத னைப்பட்டுக் கொண்டிருக்கும் - அது எப்படியாக தன் குழந்தைகளை நேசிக் கிறது. அது கொல்லப்படுவதை நான் காணவேண்டிய அவசியம் இருக்காது என

நான் நம்புகிறேன்,'' என்று நான் நினைத் தேன். நான் அங்கே உட்கார்ந்து கொண் டிருக்கையில் ஏதோ ஒன்று என்னிடம், நேற்று அந்த மிருகத்தைக் குறித்து பிரசங் கித்துக் கொண்டிருந்தாயே, நீ உன் பொரு ளுக்கு அதை உவமானமாகப் பயன் படுத்திக் கொண்டாயே'' என்று கூறினது. நான், "அது சரிதான்'' என்றேன். "அது தான் உண்மையான தாய் என்று நீ கூறினாயே" நான் ''அது சரிதான்'' என் றேன். ஆனால் நான் அதை உன் கத வண்டை அனுப்பியிருக்கிறேன், அது உன் கதவண்டை ஒரு சீமாட்டியைப் போல இருபத்து நான்கு மணி நேரமாக தரித் திருந்து ஜெபிக்கப்படத்தக்கதாக தன்னு டைய தருணத்துக்காக காத்துக் கொண் டிருக்கிறதே, நீ இன்னும் ஒரு வார்த்தை கூட கூறவில்லையே.'' நான், "நல்லது, நான்..." என்றேன், நான் ''யாரிடம் நான்

பேசிக் கொண்டிருக்கிறேன். எனக்கு நானே நான் பேசிக்கொண்டிருக்கிறேனா?'' என்று கூறினேன். நான் குதித்தெழுந்து, "ஓ, தேவனே, பேசுவது நீர் தானே?" என்றேன். நான் என் தலையைத் தாழ்த்தி "ஓ இரக்கமுள்ள தேவனே, அதை அறியா திருக்கிற உம்முடைய தாழ்மையுள்ள ஊழியக்காரனை மன்னியும். அன்புள்ள தேவனே நான் ஞானத்தில் குறைவுள்ளவ னாகவும் புரிந்து கொள்வதில் மிகவும் மந்தமுள்ளவனாகவும் இருப்பதற்கு மிகவும் வருத்தப்படுகிறேன். அன்புள்ள தேவனே என்னை மன்னிக்க வேண்டு மென்று நான் ஜெபிக்கிறேன்'' என்று அழுதேன். பிறகு நான் அந்த பரிதாபமான தாய் ஓப்பசத்திடம் ஓடி அந்த மிருகத்திற்கு அருகே முழங்காலிட்டு, அது திரும்பவும் குணமடைய, ஜெபிக்க, தேவனிடம் என் தலையை உயர்த்தினேன், ஏறக்குறைய

ஜீவனே இல்லாத அந்த ஓப்பசத்தின் உடலின் மீது என் கையை வைத்து பயபக்தியுடன் ஜெபித்தேன். நான் மறுபடி யுமாக காலூன்றி நிற்கையில் அதனுடைய சரீரத்தில் ஜீவன் புதிதாக வர ஆரம்பித்தது - அது குதித்தெழுந்து தன் குட்டிகளை ஒன்று சேர்த்து எடுத்துக்கொண்டு, "அன் புள்ள ஐயா, உமக்கு நன்றி'' என்று கூறப் போவது போல என்னை நோக்கிப் பார்த்து விட்டு புல்வெளியைக் கடந்து வண்டிப் பாதையை அடைய புறப்பட்டது. அது வண்டிப் பாதைக்கு சென்று, பிறகு திரும்பி, அது வந்த விதமாகவே சாலைக்குச் சென்று காட்டுக்குள் சென்றது! நான் மிகவுமாக களிகூர்ந்தேன். ஓ எப்படியாக நான் தேவ னைத் துதித்தேன்! அந்த பரிதாபத்திற்குரிய ஓப்பசம் மிருகத்தை ஜெபத்திற்காக அவர் என் கதவண்டை வழி நடத்தினார், அதை ஜீவனுக்கென்று எழுப்பினார், பரிசுத்த

ஆவியானவர் வாசம் பண்ணத்தக்கதாக ஆத்துமா என்பதே இல்லாதிருக்கிற ஒரு மிருகம் - ஆனாலும் தேவன் தம்முடைய பலத்த கரத்தினால் அதை வழிநடத்தினார். எனக்குத் தெரிந்த வரையில் அது இன்றைக்கும் ஜீவித்து தன்னுடைய சிறு குடும்பத்தை எழுப்பிக்கொண்டிருக்கிறது.


12. தேவன், தம்முடைய பரிசுத்த ஆவியினாலே ஒரு சாதாரண ஊமையான ஓப்பசம் மிருகத்தின் ஜீவனானது காக்கப் படத்தக்கதாக, ஜெபத்திற்கு என்னிடமாக வழிநடத்துகிறாரென்றால், ஒரு ஓப்பசம் மிருகத்தைக் காட்டிலும் நீங்கள் எவ்வள வாக மதிப்புடையவர்களாயிருப்பீர்கள்? என் அருமை சகோதரரே, நீங்களும் ஜெபத்திற்காக இன்றிரவு இங்கே வந்திருக் கிறீர்களா? ஒரு ஓப்பசம் மிருகத்தை தேவன் எழுப்புகிறாரென்றால், நிச்சயமாக

உங்களையும் அவராலே எழுப்பமுடியும். ஓ, நாம் நம்முடைய முழு இருதயத் தோடும் அவரை நோக்கிப் பார்ப்போமாக! வியாதிப்பட்டு இங்கே படுத்திருக்கிற வர்களே, இராஜாதி இராஜா உங்களை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா? கவ லைப்படாதீர்கள், பயப்படாதீர்கள். "ஓ, நான் தேவனுக்கு முக்கியமில்லாதவன்'' என்று நீங்கள் கூறலாம், ஆனால் நான் இதைக் கூறுகிறேன் - நீங்கள் அவருடைய பிள்ளை, நீங்கள் தேவனுக்கு தேவை யாயிருக்கிறீர்கள், அவர் உங்களை நேசிக் கிறார். அவர் இவ்வளவாக உங்களில் அன்பு கூர்ந்ததினால் தான் அவருடைய அன்பானது வெளிக்காண்பிக்கப்பட்ட போது, எல்லையற்ற ஒப்புயர்வற்ற கிருபை யானது அதனுடைய இடத்தை எடுத்துக் கொண்டு, உங்களை தம்மிடமாக திரும்ப

மீட்பதற்காக ஒரு இரட்சகரை அனுப்பியது; இந்த இரட்சகரில் அவர் நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார். ஏனெனில் அவர் உங்களை நேசித்தார். தேவன் தம்முடைய மக்களின் உபத்திரவங் களை அவர் கண்டார். ஆகையால் அவ ருடைய தழும்புகளால் நீங்கள் குணமாகி விட்டீர்கள் - தேவனுடைய கிருபையானது ஒரு வழியை உண்டாக்குகிறது, ஏனெனில் அவருடைய அன்பிற்கு அது தேவைப் படுகிறது. ஆகவே அவருடைய அன் பானது அவருடைய உணர்வுகளை வெளிக்காண்பித்தபோது கிறிஸ்து தம்மு டைய இடத்தை எடுத்துக்கொள்ள புறப் பட்டு வந்தார் - அந்த இடத்தை எடுத்துக் கொள்ள ஒரு காரியமானது தேவைப் பட்டது - அவருடைய அன்பானது உனக்காக தனியாக வந்தது, கிருபை உனக்காக ஒரு பலியை அளித்தது.

இப்பொழுது நீங்கள் அதை விசுவாசிக்க மாத்திரமே கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள், ''அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைவான் நீங்கள் அந்த காட் சியை பிடித்துக் கொள்ளுகிறீர்கள் என்று நான் நம்புகிறேன்.

---



# கலைமானும் கரடியும்



*தலைப்பு:* **இருபதாம் நூற்றாண்டு தீர்க்கதரிசி**

73. சகோ. பிரன்ஹாம் எப்பொழுதுமே விசுவாசமுள்ள ஒரு மகனாக இருந்து வந்தார். எனவே அவருடைய தாயார் மரித்த போது, அந்த இழப்பை அவரால் தாங்கிக் கொள்ள முடியாமல் இருந்தது. ஆனால் ஆறுதலின் தேவன், அவருடைய தாயாரைக் குறித்து தன் இருதயத்தில் கொண்டிருந்து துயரத்தைப் போக்க அவருக்கு ஆறுதல் கூறினார். இழப்பின் துயரத்திலிருந்த அவருடைய கவனத்தை எவ்விதம் திசை திருப்ப வேண்டுமென்று ஒரு அன்புள்ள

தகப்பனுக்குத் தெரியும். வருங்காலத்தில் கனடாவில் சகோ. பிரன்ஹாம் மேற்கொள்ளவிருந்த ஒரு வேட்டைப் பயணத்தைக் குறித்த தரிசனத்தை தேவன் அவருக்கு அருளினார். இது நிறைவேறுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே சகோ. பிரன்ஹாம் இந்த தரிசனத்தை ஜெபர்ஸன்வில்லில் இருந்த சபையோருக்கு விவரித்தார்.

அவர் கண்ட தரிசனத்தில் அவர் வட அமெரிக்காவில் எங்கோ ஓரிடத்தில் ஒரு பெரிய வேட்டைப் பொருளை வேட்டையாடிக் கொண்டிருந்தார். அது எந்த இடம் என்று அவரால் சரியாக கூற இயலவில்லை, ஆனால் அவருக்குக் கிடைக்கப் போகின்ற வேட்டைப் பொருள் என்ன

வென்பதை அவர் அறிந்திருந்தார். அந்த வேட்டைப் பொருட்களில் ஒன்று காண்பதற்கு மானைப் போல் இருந்தது, ஆனால் அது மானைக் காட்டிலும் பெரிதாயிருந்தது. அவருடைய வாழ்க்கையிலே அவர் அத்தகைய ஒன்றைக் கண்டதுமில்லை, வேட்டையாடினதுமில்லை. அவர் அந்த மிருகத்தை வேட்டையாடச் சென்றபோது, அவருடன் இருவர் இருந்தனர், அவர்களில் ஒருவர் கட்டம் போட்ட பச்சை சட்டை அணிந்திருந்தார். மானைப் போல் காணப்பட்ட இந்த மிருகத்தை அவர் சந்தடியின்றி பின் தொடரும் கையில், அவருடைய கண்களில் அதே இனத்தைச் சேர்ந்த ஒரு பெண்மானும் ஒரு மான்குட்டியும் தென்பட்டன.

அவர் சரியான ஒரு நிலையில் துப்பாக்கியை குறிவைத்து அந்த மிருகத்தை சுட்டு வீழ்த்தி விட்டு, அதை பரிசோதிக்கச் சென்றார். அவர் அவ்விதம் பரிசோதிக்கையில், ஒரு சிறு பிள்ளையின் கரம் போன்ற ஒன்று அதன் கொம்பின் நீளத்தை அளப் பதை அவர் கண்டார். அளக்கும் நாடா வில் அது 42 அங்குலமாயிருந்தது.

அவர் வேட்டையாடிய இந்தப் பொருளைக் கொண்டு வருகையில், வெள்ளி முனை கொண்ட 'கிரிஸ்லி' வகையைச் சேர்ந்த (grizzly) ஒரு கரடியைக் கண்டார். அதை அவர் ஒரே சுட்டில் கொன்று விட் டார். அது செத்து கீழே கிடக்கையில், அவர் 270 துப்பாக்கியை உபயோகித்து 130

ரவைக் குண்டினால் அதைக் கொன்று விட்டதைக் குறித்து சிந்தனை செய்யத் தொடங்கினார். உண்மையில் அந்த அளவு வேட்டைப் பொருளுக்கு இது மிகவும் சிறிய துப்பாக்கி. அவர் கரடியின் தோலை உரித்தார். அதன் பிறகு அந்த தரிசனம் அவரை விட்டு நீங்கினது.

74. ஒரு மாதம் கழித்து, அருமை நண்பர் ஒருவர், கரடியும் நீர் எருமை யும் (moose) வேட்டையாட அவரை அலாஸ்காவுக்கு வரும்படி அழைத் தார். ஆனால் அந்த அழைப்பு தரி சனத்துடன் பொருந்துவதாகத் தோன்ற வில்லை, ஏனெனில் நீர் எருமையின் கொம்புகள் பலகை வடிவாயிருக்கும், ஆனால் தரிசனத்தில் அவர் கண்ட

மிருகத்துக்கு மானின் கொம்புகளைப் போன்ற கொம்புகள் இருந்தன.

மற்றொரு மாதம் கடந்தது. அவருக்கு பட் (ஹார்வி) சவுத்விக் என்பவரிடமிருந்து, அவருடனும், மற்றொரு கிறிஸ்தவ சகோதரனும் அவருடைய போதகருமாகிய எட்டி பிஸ்கல் என்பவருடனும் சேர்ந்து கரடி வேட்டையாட அழைப்பு வந்தது. சகோ.சவுத்விக் அலாஸ்கா நெடுஞ் சாலையில் முதல் தர வழிகாட்டியாக பணியாற்றி வந்தார். இதற்கு முன்பு சகோ. பிரன்ஹாம் அங்கு வேட்டை யாடச் சென்றிருக்கிறார். அப்பொழுது மிகவும் வியாதிப்பட்டிருந்த ஒரு பையன் சுகம் பெற அவர் உதவி

செய்தார். அவன் சுகம் பெறுதல் இவ்வாறு நிகழ்ந்தது.

ஃபோர்ட் செயின்ட் ஜான் என்னுமிடம் தூர வடக்கில் உள்ளது. உண்மையில் அது யூகான் பிரதேசத்தில் உள்ளது. அங்கு சூரியன் அஸ்தமிப்பதில்லை, இருட்டாகும் என்பது மட்டுமே. எனவே வேட்டைக்காரர்களுக்கு ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து பேச நிறைய நேரம் இருந்தது. சங்கை பிஸ்கல் பட்டிடம் சகோ. பிரன்ஹாமின் கூட்டங்களைக் குறித்தும், தரிசனங்கள், சுகம் பெறுதல் போன்றவைகளைக் குறித்தும் உரையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது பட், வலிப்பு நோயினால் அவதியுறும் தன் சகோதரனை சகோ. பிரன்ஹாம்

காண நேரிட்டால் நலமாயிருக்கும் என்று கூறினார். ஏனெனில் அதன் மூலம் நன்மையானது ஒன்று நிச்சயம் பிறக்கும் என்று அவர் உறுதியாக அறிந்திருந்தார். சகோ. பிரன்ஹாம் ஒரு தரிசனம் கண்டு அந்த பையன் சுகம் பெற ஜெபிப்பது குறித்து அவர் அடிக்கடி பேசிக் கொண்டு வந்தார்.

ஒருநாள் சகோ. பிரன்ஹாம், பாதை தவறி திரிந்து கொண்டிருந்த குதிரை களை மீண்டும் பாதையில் கொண்டு வர தன் கூட்டாளிகளுக்கு உதவி செய்து முடித்த பிறகு, இந்த வாலி பனைக் குறித்த தரிசனம் ஒன்றைக் கண்டார். அவர் பாதையில் குதிரை யின் மேல் சவாரி செய்து கடைசியில் வந்து கொண்டிருந்தார். எனவே அவர்

பட்டிடம் பேசுவதற்காக குதிரையை காலால் தட்டி ஓட்டி முன்னால் வந்தார். அவர் திரு. சவுத்விக்கிடம், அவருடைய சகோத ரனுக்கு சிறு வயது முதற்கொண்டே இந்த வலிப்பு நோய் இருந்து வந்திருப்பதாக தரிசனம் அவருக்குக் காண்பித்தது என்று கூறி, அந்த வாலிபனைக் குறித்து விவரித்துக் கொண்டே சென் றார். அது முற்றிலும் உண்மையா யிருந்தது. அதன்பிறகு அவர், அந்த பைய னுக்கு ஆளனுப்பி ஃபோர்ட் செயின்ட் ஜானுக்கு கொண்டு வந்து அவனைக் கவனித்துக் கொண்டே இருக்க வேண்டுமென்றும், அடுத்த முறை வலிப்பு வரும்போது அவ னுடைய சட்டையைக் கிழித்து நெருப் பில் எரிந்தால் வலிப்பு நோய்

அவனை விட்டுப் போய் விடுமென்றும், இதையெல்லாம் அவர் கர்த்தரின் நாமத்தில் செய்தால், வெற்றி நிச்சயம் என்றும் கூறினார்.

75. நல்லது. அவர்கள் அந்த பையனை ஃபோர்ட் செயின்ட் ஜானுக்கு கொண்டு வந்தனர். பட் தன் மனைவியிடம் அவருக்கு “கர்த்தர் உரைக்கிறதாவது என்பது உள்ளதென்றும், அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம், செய்யக் கூறினதை அவ்விதமே பின்பற்றுதலே என்றார். அந்த ஏழை பையனுக்கு சில நாட்களில், ஒரே நாளில் ஆறு முறை வலிப்பு வந்ததுண்டு. அவனுக்கு அடுத்த முறை வலிப்பு வந்தபோது, பட் அப்பொழுது வீட்டில் இல்லை. ஆனால்

திருமதி.சவுத்விக் ஆவியில் நிறைந்த ஒரு கிறிஸ்தவப் பெண். அவள் அவனுடைய சட்டையைக் கிழித்து கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் அதை நெருப்பில் எரிந்தாள். வலிப்பு நின்று போய் அது மறுபடியும் வரவேயில்லை

எனவே வேட்டைக்காக சகோ. பிரன்ஹாமுக்கு அழைப்பு வந்த போது, அவருக்குப் போக வேண்டும் என்னும் உணர்வு உண்டானது. அவரும் ஃபிரட் சாத்மனும் புறப் பட்டுச் சென்று, போகும் வழியில் நூற்றுக்கணக்கானோரிடம் அந்த தரி சனத்தைக் கூறினர். எனவே அநேகர், அவருடைய பயணத்தின் விளைவை அறிய ஆவலாய் காத்திருந்து,

இம்முறை அந்த தரிசனம் நிறை வேறுமோ நிறைவேறாதோ என்று எண்ணிக் கொண்டிருந்தனர்.

இந்த இருவரும், அவர்கள் வேட்டைக்குப் போகின்ற அந்த காட்டுப் பிரதேசத்தின் அமைப்பையும் அவர்களுக்குக் கிடைக்கப் போகின்ற இரு மிருகங்களையும் வரையும் அளவுக் குச் சென்றுவிட்டனர்.

அந்த இடத்தை அடைந்தவுடன் அவர் தன்னுடைய வழிகாட்டி யிடம் இதைக் குறித்து பேசினார். அந்த காட்டில் அத்தகைய மிருகங்கள் எதுவு மில்லை என்று அவருக்கு அறிவிக்கப் பட்டது; சொல்லப்போனால் மான் களே அங்கு அபூர்வம். மேலும் கலைமான்களுக்கு பலகை வடிவுள்ள

கொம்புகளே இருக்கும், தரிசனத்தில் கண்ட அந்த மிருகத்துக்கு அப்படிப் பட்ட கொம்புகள் இருக்கவில்லை. மட்டுமின்றி, அங்கு கரடிகள் - முக்கியமாக வெள்ளி முனை கரடிகள் - கிடையவே கிடையாது.

76. சங்கை பிரன்ஹாம் அதைக் குறித்து கவலை கொள்ளவேயில்லை. ஏனெனில் அந்த தரிசனம் ஒருக்கால் வரப்போகும் நாட்கள் ஒன்றில் நிறைவேறக் கூடும், ஆனால் அந்த தரிசனம் எப்படியும் நிறைவேறும் என்பதை மட்டும் அவர் அறிந்திருந் தார்

அவர்கள் ஆடுகளைத் தேடத் தொடங்கினர். மூன்று நாட்கள் கழித்து எட்டி ஒரு ஆற்றில் விழுந்தார்.

எனவே அவர் இடுப்பை மாற்றிக் கொள்ள ட்ரெயிலர்' வண்டிக்குச் சென் றார். மற்றவர்கள் தொடர்ந்து மலை யில் ஏறி உயரத்தை அடைந்தனர். காலையில் அவர்கள் ஒரு கலை மானையும் அதன் குட்டியையும் கண்டனர். அதன் பிறகு அவர்கள் சில ஆடுகளைக் கண்டனர். எட்டி ஒரு ஆண் கலை மானைக் கண்டு அதை சுட்டுக் கொன்றார். அவர்கள் அதைச் சுத்தம் செய்து தங்கள் முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

சகோ. பிரன்ஹாமும் பட்டும் வேட் டைப் பொருளைத் தேடி மலையின் மற்ற பாகத்துக்குச் செல்ல எண்ணி அங்கு புறப்பட்டுச் சென்றனர். சகோ. பிரன்ஹாம் தன்னிடமிருந்த தூரப்

பார்வை கண்ணாடியைக் கொண்டு மலையை முழுவதும் நுட்பமாக பார்வையிட தீர்மானித்தார். அவர் அவ்விதம் செய்த போது, அவர் தரிசனத்தில் கண்ட அந்த மிருகம் அங்கிருந்தது. அவர் தூரப்பார்வை கண்ணாடியை பட்டிடம் கொடுத்தார். அவர் ஒரு பெரிய கலைமானைக் கண்டார். அதன் கொம்புகள் வித்தி யாசமாயிருந்தன. அவை பலகை வடிவில் இராமல், மான்களின் கொம்புகள் போல் இருந்தன. அந்த மிருகமும் அந்த காட்சியின் அமைப் பும் அவர் தரிசனத்தில் கண்டபடியே அமைந்திருந்தன.

அப்பொழுது பட் சகோ. பிரன்ஹா மிடம், அப்படியானால் அங்கு ஒரு

கரடியும் கட்டம் போட்ட பச்சை சட்டை அணிந்த ஒருவரும் இருக்க வேண்டுமே என்றார். சகோ. பிரன்ஹாம் அவரிடம், முகாம் இருந்த திசையில் பார்க்கும்படி கூறினார். அங்கு எட்டி, வேட்டைக்குச் செல்கை யில் அவர் எடுத்துச் சென்ற மூட்டை யில் தன் மனைவி வைத்திருந்த கட்டம் போட்ட பச்சை சட்டை அணிந்தவராய் அங்கிருந்தார்.

அப்பொழுது பட் மறுபடியும் அந்த கலைமானை உற்று நோக்கினார். அது அவர்கள் இருந்த திசையை நோக்கிக் கொண்டிருப்பதாலும், அவர்களை மறைப்பதற்கு அங்கு போதிய புதர்கள் இல்லாதனாலும் அதை நிச்சயம் சுட்டு வீழ்த்த முடியாது என்று அவர்

எண்ணினார். ஆனால் அவர்கள் தொடர்ந்து முன்சென்றனர், அந்த மிருகமோ அசையாமல் அங்கேயே நின்று கொண்டிருந்தது. அவர்கள் 35 கெஜ தூரத்தை அடைந்தனர். சகோ. பிரன்ஹாம் அந்த கலைமானைச் சுட்டு வீழ்த்தினார். மற்ற கலைமான்களும் சுற்று வட்டாரத்தில் இருந்தன. ஆனால் அவை பலகை வடிவுள்ள கொம்பு களைக் கொண்டிருந்தன.

77. அப்பொழுது ஒரு கேள்வி எழுந்தது. அதாவது, ஒரு கரடியும் அங்கிருக்குமா? அது பழைய ஏற் பாட்டின் காலத்தில் எழுந்த கேள் வியைப் போன்றது. அதாவது, தேவன் மன்னாவைப் புசிக்கக் கொடுத்தார்.

ஆனால் அவரால் தண்ணீரும் கொடுக்க முடியுமா?

பட் தூரப் பார்வை கண்ணாடியை எடுத்து மலையை நுட்பமாக நோக்கினார். அவரால் மலையின் முழு பரப்பையும் காண முடிந் தது. ஆனால் அங்கு கரடியோ அல்லது கரடி ஒளிந்திருக்கும் இடமோ இருக்கவில்லை. பட் சந்தேகம் கொள்ள ஆரம்பித்தார். ஆனால் சகோ. பிரன்ஹாம், தேவனின் நாமங்களில் ஒன்று “நமக்குக் கொடுக்கிற கர்த்தர்” என்பதை பட்டுக்கு நினைவுபடுத்தினார். தேவன் ஒரு கரடியை கொடுப்பதாக வாக்களித்து விட்டு அவர் அதை கொடுக்காமல் போனால் அது விசித்திரமான ஒன்றாயிருக்கும். சுற்றுவட்டாரத்தில்

ஆட்டுக்கடாக்கள் இல்லாதிருக்கையில், தேவன் ஆபிரகாமுக்கு புதரில் சிக்கிக் கொண்டிருந்த ஒரு ஆட்டுக் கடாவைக் கொடுத்தார். எனவே ஒரு கரடி விரைவில் காட்சியில் வர வேண்டும். மேலும் “கர்த்தர் உரைக் கிறதாவது”, அது பெரிய 'கிரிஸ்லி' கரடியாயிருக்கும் என்பதாய் உள்ளது. அவர்கள் கட்டம் போட்ட பச்சை சட்டை அணிந்த மனிதனைக் கண்டு விட்டனர், அவர்கள் ஏற்கனவே “அங்கிருக்க சாத்தியமில்லை” என்று கருதப்பட்ட மிருகத்தைக் கொன்று விட்டனர். எனவே வாக்களிக்கப்பட்ட மூன்றாவது காரியமும் நிறைவேற வேண்டும்.

அவர்கள் நடந்து செல்லத் தொடங்கினர். பட் தன் சந்தேகங்களைத் தெரிவித்துக் கொண்டே வந்தார். அவருக்கு விசுவாசிக்கப் பிரியமில்லை என்பதனால் அல்ல, ஆனால் சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்ததனாலும், கரடி எதுவும் அவர்கள் பார்வைக்குத் தென்படாதனாலும், அது ஒளிந்து கொள்வதற்கு இடம் எதுவும் இல்லாதனாலும், இதை விசுவாசிப்பதென்பது கடினமாகத் தோன்றினது.

78. பட் ஒரு குறிப்பிட்ட திசையில் தூரப் பார்வை கண்ணாடியைக் கொண்டு நுட்பமாக பார்த்துக் கொண்டிருந்த போது, சகோ. பிரன்ஹாம் மற்றொரு பக்கம் பார்த்துக் கொண்

டிருந்தார். திடீரென்று அவர் பட்டிடம் அவர் பக்கம் திரும்பக் கூறி, மலை யில் ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சுட்டிக்காட்டி, அவர் அங்கு காண்பது என்னவென்று கேட்டார். அங்கு பட் அதுவரை காணாத மிகப் பெரிய வெள்ளி முனை கொண்ட 'கிரிஸ்லி கரடி' ஒன்றைக் கண்டார். அவர் அதைக் கண்டபோது ஏறக்குறைய மயங்கி விழுந்து விட்டார். அங்கு பசுவின் அளவுக்குப் பெரிதாயிருந்த அந்த கரடி நான்கு கால்களிலும் நின்று கொண்டிருந்தது. காற்று அதன் உரோமம் வழியாய் வீசி அதை உயரப் பறக்கச் செய்தது.

அந்த தூரத்திலிருந்தே அந்த கரடியைச் சுட பட் எண்ணினார்.

ஆனால் தரிசனத்தின்படி அவர்கள் 500 கெஜ தூரத்துக்குள் வரவேண்டும். அந்த கரடிக்கு மிகவும் அருகில் செல்ல பட் பயந்தார், ஏனெனில் இருதயத்தில் குண்டு பாய்ந்த ஒரு கரடி அப்பொழுதும் அவர்களை நோக்கி வேகமாக ஓடி கொன்று போட வாய்ப்புண்டு. ஏனெனில் 'கிரிஸ்லி' வகையைச் சேர்ந்த கரடிகள் மிகவும் கொடூரமானவை. அவை ஜனங் களைக் கொன்று போடும் ஒரு காலத்தில் அது சமவெளியில் தீவிர பயத்தை உண்டாக்கும் ஒன்றாகத் திகழ்ந்து வந்தது. அமெரிக்க இந்தியர் களால் அது “மனிதனைப் போல் நடக்கும் கரடி” என்று அழைக்கப்பட்டு வந்தது.

எனவே அவர்கள் கரடியை நோக்கி நடந்து சென்றனர். சகோ. பிரன்ஹா மின் கையில் அந்த 270 எண் சிறு துப்பாக்கியும் 130 ரவை தோட்டாக் கள் மட்டுமே இருந்தன. கரடியைச் சுடுவதற்கு வெதர்பி துப்பாக்கியாவது அவசியம். ஆனால் தரிசனமோ நெருங்கின தூரத்தில் ஒரு சிறு துப்பாக்கியைக் கொண்டு அந்த கரடி சுடப்படும் என்றும், அது உருண்டு வந்து அவர்களுடைய கால்களின் அருகே விழும் என்றும் காண்பித்தது.

தரிசனம் காண்பது மிகவும் அருமையானது தான், ஆனால் அந்த தரிசனத்தின் ஒரு பாகமாக விளங்கி, அதை பயங்கர ஆபத்துகளினிடையே நிறைவேற்றுவதென்பது மற்றொரு

காரியம். அப்போஸ்தலனாகிய பவுல், கப்பல் சேதம் ஏற்பட்டு, அது மூழ்கி, அதிலிருந்த அனைவரும் - நீந்தத் தெரியாதவரும் கூட - கரையைப் பாதுகாப்பாக அடைந்ததாக தரிசனம் கண்டான். அந்த தரிசனம் காண்பதற்கு அற்புதமாயிருந்தது, ஆனால் அதன் தலைவனாக இருந்து அதை நிறை வேற்ற பவுலுக்குத் தைரியம் தேவை யாயிருந்தது. எனவே இருவரும் கரடியை நோக்கி நடந்து சென்றனர். சகோ. பிரன்ஹாம் பட்டை உற்சாகப் படுத்தி, அவரிடம் பி.பி.துப்பாக்கி இருந்தாலும் அவரால் அந்த கரடி யைச் சுட்டு வீழ்த்த இயலும், ஏனெ னில் தேவனுடைய வார்த்தை ஒரு போதும் தவறாது என்று கூறினார்.

79. அவர்கள் மெல்ல மெல்ல கரடியை நெருங்கினர். சகோ. பிரன்ஹாம் கரடியை முதுகில் சுட்டு அதன் முதுகெலும்பை உடைத்து அதை ஓட முடியாமல் செய்துவிட வேண்டுமென்று பட் கருத்து தெரிவித்தார். ஆனால் சகோ. பிரன்ஹாமோ இருதயத்தைச் சுட வேண்டுமென்று தீர்மானித்தார். ஏனெனில் தரிசனத்துக்கு கீழ்ப்படியாமல் இருத்தல் தோல்வி அல்லது சேதத்தை விளைவிக்கக்கூடும். வேண்டுமானால் பட் பின்னால் தங்கி விடலாம் என்று அவரிடம் ஆலோசனை கூறப்பட்டது. ஆனால் பட்டோ அவ்விதம் செய்ய விரும்பவில்லை.

கரடி இருந்த இடத்திலிருந்து 300 கெஜ தூரத்துக்குள் இருந்த ஒரு சிறு குன்றின் உச்சியின் மேல் அவர்கள் ஏறினர். அந்த கரடி அங்கிருந்தது. பெரிய உருவம் கொண்ட அந்த 'கிரிஸ்லி' கரடி அவர்களை நோக்கி விரைவாக ஓடிவந்தது. அப்பொழுது சங்கை பிரன்ஹாம் அதன் இருதயத்தைக் குறிவைத்து சுட்டார். அது மலையின் மேலிருந்து கீழே வந்த காரணத்தால், அது மிகவும் விரைவாக அவர்களை நோக்கி ஓடி வந்து, முடிவில் அவர்களுக்கு 50 கெஜ தூரத்தில் விழுந்தது.

அந்த கரடி இறந்து போனது. அவர் கண்ட தரிசனத்தின்படி, எல்லாமே பூரணமாக நிறைவேறினது.

பட் பிரமிப்பால் வாயடைத்து போனார். அவரால் பேசவே முடிய வில்லை. அவர்கள் முகாமில் கலை மானின் கொம்புகளை அளந்து நோக் கும்போது அது சரியாக 42 அங்குலம் இருந்தால், அவர் வாய் விட்டு அலறு வார் என்று அவருக்குத் தோன்றினது. சகோ. பிரன்ஹாம் அவரிடம், வேண்டு மானால் அவர் இப்பொழுதே வாய் விட்டு அலறலாம் என்றும், ஏனெனில் அது நிச்சயமாக 42 அங்குலம் இருக்கும் என்றும் கூறினார்.

அவர்கள் முகாமை அடைந்த போது, முகாமில் இருந்த எட்டியின் சிறு மகன் கொம்புகளை அளக்கும் போது கவனிக்கும்படி அவர் பட்டிடம் கூறினார், ஏனெனில் அதை அளப்பது

ஒரு சிறு கை என்பதாக அவர் தரிசனத்தில் கண்டார். எட்டி அளக்கும் நாடாவைக் கையிலெடுத்து, கொம்பு களை அளப்பதற்காக தன் மகனைக் கூப்பிட்டு, அவனிடம் நாடாவின் ஒரு முனையைப் பிடித்துக்கொள்ளக் கூறின போது, அவர் தரிசனத்தில் கண்டவிதமாகவே, ஒரு சிறு கரம் அந்த நாடாவைப் பிடித்துக் கொண் டிருந்தது. அது சரியாக 42 அங்குலம் இருந்தது.

80. பட்டால் பேசவே முடிய வில்லை. அவர் இப்பயணத்தில் அதிக மாக கண்டுவிட்டார். அவர் ஆச்சரி யத்துடன் சகோ. பிரன்ஹாமிடம் திரும்பி, அடுத்த ஆண்டு அவர் எங் கிருப்பார் என்று கேட்டார். அவருக்கு

ஒருக்கால் எல்லாமே தெரிந்திருக்கக் கூடும் என்று அவர் எண்ணினார். அவர் அதிகமான காரியங்களை இப் பயணயத்தில் கண்டு கொண்டார்.

தேவன் இத்தகைய காரியங்களை ஏன் செய்கிறார்? ஏனெனில் அவர் நம்மில் அன்பு கூர்ந்து நமக்காக கவலை கொள்கிறார். அவர் நமது வாழ்க்கையில் எல்லா நேரத்திலும் கூட இருக்கப் பிரியப்படுகிறார். ஒருநாள் அதை நாம் உணர்வோம். அப்பொழுது காலதாமதாயிருக்காது என்று நான் நம்புகிறேன்.



சகோ. பிரன்ஹாம் தரிசனத்தில் கண்டு, பின் வேட்டையாடின கரடி



சகோ.பிரன்ஹாம் தரிசனத்தில் கண்டு, பின் வேட்டையாடின மான்



கழுகின் சத்தம்

ஏப்ரல் 8, 2025

1